# மண்டைதீவு ஷெல்லுக்கு குருநகரில் 9 பேர்காயம்


விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 10 இதழ் 136

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26 - 7 - 1995


(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா படையினர் நேற்று மாலை 5.30 மணியளவில் குருநகர் தொடர்மாடி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலில் ஒரே குடும்பத்தில் தாயும் அவரின் இரு பிள்ளைகளும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு;

(5ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்தும் நேற்றிரவு ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ். நகரை நோக்கி நேற்றிரவு 9 மணியிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது:

இச்ஷெல்கள் பண்ணைச் கடற்கரையில் வீழ்ந்து வெடித்தன. படையினரின் இச்ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து மக்கள் இரவோடு இரவாகப் பாதுகாப்பு வலயப் பகுதி நோக்கிச் சென்றனர்.

[6ம பக்கம் பார்க்க]

# புத்தளத்தில் புலிகள் அதிரடி

# ஆறு இராணுவம் உயிரிழப்பு!

## 7 பேர் படுகாயம்

(புத்தளம்)

வடமேற்கு மாகாணத்தில் புத்தளம் இலவன்குள காட்டுப் பகுதி இராணுவ நிலைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியானுர்கள் ஏழுபேர் படுகாயமடைந்தனர்.

புத்தளம் இலவன்குளத்திலுள்ள இராணுவ காவல் நிலையம் நேற்றுக்காலை 5-30 மணியளவில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்தது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் செபஸ்ரியன், சந்திரானந்த, சமன்சில்வா, சுனில்குமார, சாந்தி பிரேமசிங்க ஆகிய ஐந்து இராணுவத்தினரின் சடலங்கள் புத்தளம் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

(6ம் பக்கம் பார்க்க)

## ஜனுதிபதியை கொல்ல புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

ஜனுதிபதி சந்திரிகாவையும் இரண்டு அமைச்சர்களையும் கொலை செய்வதற்கு புலிகள் திட்டமிட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரீத்தாஸ் தெரிவித்தது.

இதற்காக புலிகளின் தாக்குதல் பிரிவு ஒன்று கொழும்பு நகரில் ஊடுருவியிருப்பதாகவும் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது.

இத் திட்டத்தை நிறைவேற்றும் புலிகளின் தாக்குதல் பிரிவு கொழும்பில் ஊடுருவியிருப்பதாக தெரிவிக்கப்படுவதையடுத்து நகரின் பல பாகங்களிலும் சந்தேகத்திற்குரியவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரிஞல் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

ம- ரி

## இலங்கை இராணுவத்தினருக்கு அமெரிக்காவில் விசேட பயிற்சி

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்குச் சிறந்த இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, இராணுவப் பட்டப் படிப்பு உட்படப் பல இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்கு அமெரிக்க இராணுவப் பிரிவு தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மேற்படி பயிற்சிகளை பெறுவதற்காக இலங்கை இராணுவத்தில் உள்ள இளம் அதிகாரிகளைத் தெரிவு செய்வதில்

(6ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை ஆவணங்கள் யாழ். வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தர பரீட்சைக்கான காகிதாதிகளோ வினுத்தாள்களோ நேற்று மாலை வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

யாழ். மாவட்டத்திற்கான க பொ. த உயர்தர பரீட்சைக்குரிய விஞத்தாள்கள் உட்பட பரீட்சைக்கான ஆவணங்கள் என்பன காங்கேசன் துறை வழியாக கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வர படுவதாக நேற்று முன் தினம் காலை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு தகவல் ஒன்று கிடைத்தது தெரிந்ததே.

இதனை தொடர்ந்து கல்வித் திணைக்கள ஊழியர்கள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு விரைந்து சென்று பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பரீட்சைக்கான ஆவணங்கள் நேற்றும் வந்து சேராததினுல் கல்வித்திணைக்கள அதிகாரிகள் பெரும குழப்பநிலையில் காணப்படுகின்றனர்.

170- ரி

## ஐ. நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கை விவகாரம் ஆராய்வு

(ஜெனீவா)

ஐ. நா. மனித உரிமைகள் குழு மாநாடு நேற்று முன் தினம் ஜெனீவாவில் நடைபெற்றது.

18 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்குழுக் கூட்டத்தில், சிறிலங்காவின் மனித உரிமை பேணல் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையும் ஆராயப்பட்டது.

சிறிலங்காவில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் காரணமின்றிக் கைது செய்யப்படுதல், திடீர் திடீரெனத் தமிழர்கள் காணுமற்போதல், மர்மமான முறையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டு வீசப்பட்ட சடலங்கள் போன்றன மனித உரிமை மீறல்கள் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டுக் கேள்விகள் எழுப்பப்

(6-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ ஊழல், மோசடிகள் குறித்து பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்!

(கொழும்பு)

கடந்தகாலங்களில் இராணுவத்தில் இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள் பற்றி பொலிசாரின் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என்று வெரித்தாஸ் தெரிவித்தது.

முதலில் முன்னுள் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்னுவை பொலிசார் விசாரணை செய்யவுள்ளனர்.

இவர் பதவி வகித்த காலத்தில் 72 மில்லியன் ரூபாவுக்கான ஆயுதக் கொள்வனவு, மற்றும் ஆயுதக்கொள்வனவில் இடம்பெற்றமோசடிகள்பற்றி விசாரிக்கப்படஉள்ளார்.

பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தால் வெளிநாடு செல்லாது இவரின்பாஸ்போட் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த விசாரணைகளை குறித்து முன்னுள் படை அதிகாரிகள் பலர் அரசுக்கு தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி கடலில் பாரிய கப்பல்கள் நங்கூரம்

(தாளையடி)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற் பிரதேசத்தில் கரைக்கு மிக அண்மையில் பாரிய தரை இறக்கும் கப்பல்கள் இரண்டு நங்கூரமிட்டுள்ளன. நேற்று அதிகாலைவேளை சுமார் எட்டு பீரங்கிப்படகுகள் பாதுகாப்பு வழங்க இக்கப்பல்கள் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற் பகுதியில் கரைக்கு மிக அண்மையில் வந்து சேர்ந்தன.

இக் கப்பல்களிலிருந்து நேற்றுபகல் முழுவதும் இராணுவத்தினரும், இராணுவ தளபாடங்கள் உணவுப் பொருட்களும் இறக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கிய கடற்படைப் பீரங்கிப்படகுகள் அதிகாலையிலிருந்தே குடிமனைப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடாத்தின. காலை 5.30 மணியளவில் அனைத்துப் பீரங்கிப் படகுகளும் ஒரே நேரத்தில் குடிமனைப் பகுதிகளை நோக்கி சுமார் 15 நிமிடங்கள் பீரங்கித் தாக்குதல்களை நடாத்தின.

கடற்படை பீரங்கிப் படகுகள் கரைக்கு மிக அண்மை

(6ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### சிகிச்சை நிலையம்

மாவடி - மூளாய் வீதியில் உள்ள லிங்கம் சிகிச்சை நிலையம் வழமைபோல் இயங்கி வருகிறது என்பதனை அறியத் தருகிறோம். சிகிச்சை நேரம்: தினசரி காலை 8மணி - 11 மணி வரை, நிர்வாகி. சி-1568

### சேவை

சகலவிதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள். ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி.
(ஏ-5134)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)


## நுங்கு திணிக்கப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(நெல்லியடி)

வாய்க்குள் நுங்கு திணிக்கப்பட்ட நிலையில் ஒரு இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த வாரம் புலோலி மாதனைப் பகுதியில் பனங்கூடலிலேயே நுங்கு திணிக்கப்பட்ட நிலையில் இவர் மர்மமாக இறந்து கிடந்தார்.

இதுதொடர்பாக பருத்தித்துறை காவல்துறையினர் இரு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில கைதுசெய்துள்ளனர். 160-சி

## ஆஸ்பத்திரியிலிருந்த நோயாளி குளத்திலிருந்து சடலமாக மீட்பு

(கொழும்பு)

பேராதனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் அருகிலிருந்த குளமொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

கடந்த சில தினங்களுக்கு முன் இந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மேற்படி நோயாளியை ஆஸ்பத்திரியில் காணாத வைத்தியர்கள் இவரை கண்டுபிடிக்குமாறு கூறியதையடுத்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் தேடிய போதே அருகிலிருந்த குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். -சி

## புற்று நோயினால் இறப்பவர்தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

புற்று நோயினால் எமதுநாட்டில் இறப்போர் தொகை அதிகரித்திருப்பதாக வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க வெளியீடொன்று தெரிவிக்கின்றது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இருதய நோய்க்கு அடுத்தபடியாக அதிக இறப்புக்கள் புற்றுநோயினால் சம்பவிக்கின்றன. புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை இனங்காண்பதன் மூலம் இந்நோய் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ளலாம். இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு உரிய மருந்துகளைக் கொடுத்தல் சத்திர சிகிச்சை அல்லது கதிர் அல்லது ரேடியம் ஆகியவற்றுள் ஒன்றினையோ அல்லது அனைத்தையுமோ அளித்து நோயினை ஒரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

எமது மக்களிடம் இந்நோய் பற்றிய போதிய விளக்கமின்மையாலும் அல்லது பயம் காரணமாகவும் வைத்திய ஆலோசனை பெறத்தவறும் காரணத்தினால் நோய் முற்றி ஆபத்தடையும் போதுதான் எமது பிரதேசத்தில் அதிகமானோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடுகின்றனர்.

இப்படி எவ்வளவு காலத்துக்குச் சிகிச்சை தாமதமடைகின்றதோ அதற்கேற்றவாறு மரணத்தின் ஆபத்தும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 162-சி

## துருக்கி நீச்சல் போட்டியில் குற்றாலீஸ்வரன் 5-ம் இடம்

(சென்னை)

இளம் தமிழ் நீச்சல் வீரரான குற்றாலீஸ்வரன் துருக்கியில் நடைபெற்ற சர்வதேச நீச்சல் போட்டியொன்றில் ஐந்தாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்,

இவர் 43 நிமிடம் 20 62 செக்கனில் குறிப்பிட்ட தூரத்தை நீந்திக் கடந்தார். முதலாவது இடத்தைப் பெற்ற ஹொங்கொங் வீரர் இத் தூரத்தை 39 நிமிடம் 51. 85 செக்கனில் நீந்திக் கடந்தார்.

இப்போட்டியில் பல நாடுகளையும் சேர்ந்த மொத்தம் 216 பேர் கலந்துகொண்டனர்.

சென்னையைச் சேர்ந்த மாணவரான குற்றாலீஸ்வரன் பாக்குநீரிணை உட்பட பல நீரிணைகளை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளமை தெரிந்ததே கி-சி

## ஏவுகணை செலுத்து தளத்தை இந்தியா இடம்மாற்றியது

(புதுடில்லி)

இந்தியா அதன் ஏவுகணை செலுத்தும் தளத்தை இடம் மாற்றியுள்ளது.

முன்னர் இவ் ஏவுகணைச் செலுத்தி தளம் ஒரிஸா மாநிலத்தில் 250 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது அது வங்கக்கடலிலுள்ள ஒரு தீவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. ஒரிஸா கரைக்கு அப்பாலுள்ள இந்த 250 வீலர் வெளித் தீவு ஏவுகணை சோதனைகளுக்காக மத்திய அரசினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கி-சி

## கொழும்பில் ஐந்து பெண் ஊழியர்கள் உண்ணாவிரத போராட்டம்

(கொழும்பு)

கொழும்பில் சிலோன் டயமன் நிறுவனத்தைச் சேர்ந்த ஐந்து பெண் ஊழியர்கள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

கொழும்பு தொழில் செயலகத்தின் ஒன்பதாம் மாடியில் உண்ணாவிரதமிருக்கும் இவர்களின் உடல் நிலை மோசமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நேற்று முன்தினம் காலைமுதல் உணவு அருந்தவில்லை.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தமது சகஊழியர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இந்த ஐந்து பெண் தொழிலாளர்களும் உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள். சி-

## இழப்பீட்டு விபரம்

(யாழ்ப்பாணம்)

லீப் போவேட் இராணுவ நடவடிக்கையின் பொழுது சிக்கனகடன் கூட்டுறவு சங்கங்களில் ஏற்பட்ட பொருள் சொத்து ஆவணங்கள்தொடர்பான இழப்புகளை தங்கள் பகுதியில் அமைந்துள்ள காவல் துறை நிலையங்களில் பதிவு செய்யுமாறும் இழப்பீட்டு விபரங்களை 31ம் திகதிக்கு முன் யாழ் மா. சி. க. கூ. ச சமாசத்திற்கு அனுப்பி வைக்குமாறும் சி- க, கூ. சங்கங்களின் சமாசம் கேட்டுக்கொள்கிறது.

## மருந்துகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

ஹபரண கப்பலில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

இரண்டாம் காலாண்டின் மிகுதி தொகுதி மருந்துகளே எடுத்துவரப்பட்டுள்ளது. ஆனால் பனடோல் குளிசைகள் வராததினால் வைத்தியசாலையில் பனடோலுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது. 170-சி

## கொழும்பில் பலத்தமழை

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு கடும் மழை பெய்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலைவரை மழை பெய்து கொண்டேயிருந்ததினால் கொழும்பு மாநகரில் நேற்று வழமையான செயற்பாடுகள் பாதிப்புற்றன. கி-சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995 – 07 - 26**

புதன் இரவு

- 8-02 குயிலோசை - நிகழ்ச்சி வேலணையூர் சுரேஸ் எழுதிய ''தாயின் மடியில்'' கிராமிய நிகழ்வு
- 8-20 வாத்திய கானங்கள்
- 8-30 செய்திகள்
- 8-40 நாடகம் ந. கிருஷ்ணா எழுதிய 'அவலம்'

**1995–07–27**

வியாழன் காலை

- 7-02 மாவீர வணக்கம்
- 7-15 விடுதலை கீதங்கள்
- 7-30 செய்திகள்
- 7-35 பத்திரிகைச் செய்திகள்
- 7-45 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–07–26**

புதன் மாலை

- 5-01 சிந்தனைச் சிதறல்
- 5-02 எழுச்சிகீதம்
- 5-10 புதியவை
- 5-15 படப்பாடல்கள்
- 5-30 அறிவூற்று
- 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
- 6-02 உங்கள் தெரிவு
- 6-10 செய்திகள்
- 6-15 விளையாட்டுச் செய்திகள்
- 6-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- 6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தவறணைச் சண்டை வாய்க்கடியில் முடிந்தது

[நெல்லியடி]

கள்ளுத் தவறணையில் ஏற்பட்ட வாய்த் தகராறு, இறுதியில் ஒருவர் பற்களினால் கடியுண்டு காலில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் இச் சம்பவம் வடமராட்சி கிழக்கு தாளையடியில் நிகழ்ந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த அல்பிரெட் - அந்தோனிப்பிள்ளை [வயது 51] என்னும் குடும்பஸ்தரே பற்களினால் கடியுண்டவராவர்.

இதுசம்பந்தமாக நாகர்கோவில் காவல் பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்கள். 160-சி

## கொடுத்த கடனை கேட்டவர் மீது தாக்குதல்

(நெல்லியடி)

கொடுத்த கடனை கேட்கச் சென்றவர் தாக்குதலுக்கு இலக்காகி முகம் முழுவதும் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நண்பகல் வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க காரியாலயத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்து தாளையடியில் வசித்து வரும் பொன்னையா பாஸ்கரன் (வயது 38) என்பவரே தாக்கப்பட்டவராவர். 160 சி


## கேள்வி அறிவித்தல்

### கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

### யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்துக்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும், விநியோகித்தலும் – 1995

மேற்படி விடயம் சம்பந்தமாக 1995-06-26ம் திகதிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 1995-08-16ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் முத்திரையிடப்பட்ட கேள்விகள். தளபாட விநியோகஸ்தர்களிடமிருந்து 1995-08 16ம் திகதி காலை 10-00 மணி வரை யாழ். கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 750/-ம், மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 30,000/-ம் ஆக மொத்தம் ரூபா 30,750க்கு ''கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்'' என்ற பெயருக்கு வங்கிக் கட்டளையைச் சமர்ப்பித்து, உரிய பற்றுச்சீட்டினைப் பெற்று, 1995-08-09ம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1995–07–24. [ஏ 5132]

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவ மன்றத்தால் 26-07-1995 புதன்கிழமை (இன்று) நடாத்தப்படவிருந்த அதிஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

வணிக மாணவ மன்றம் (பகல்)
யாழ். தொழில்நுட்பக்கல்லூரி. (சி-1569)

### மணிவாக்கு

ஒருவனுடைய கொள்கை எதுவாகவும் இருக்கலாம். அது முக்கியமானதல்ல. ஆனல் அவன் சிந்திப்பதும் சொல்வதும், செய்வதும் முற்றிலும் பொருநதி ஒன்று பட்டிருக்கவேண்டும். அப்போது அவன் ஆன்மசக்தி உடையவன் ஆகிருன். அவன் பேசுவது நிறை மொழி.

— மாட்டின் லூதர்.

## நமது நோக்கு

# போலித் தீர்வுத்திட்டம்

பிள்ளையார் பிடிக்க ஆரம்பித்து அது ஈற்றில் குரங்காய் மாறியது போல் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் முன்வைப்பேன் என்று சவடால் பேசிக்கொண்டு ஆரம்பித்த சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டம் இப்பொழுது மாகாண சபைகளுக்கு பரவலான அதிகாரம் வழங்குவதில் தான் முடியப்போகிறது போல் தெரிகிறது.

இவ்வார இறுதியில் சந்திரிகா நாட்டு மக்களுக்கு விசேட அறிவிப்பின் மூலம் இந்தத் தீர்வை முன்வைப்பாராம்! ஒற்றைஆட்சியின் கீழ் மாகாணசபைகளுக்கு பரவலான அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே தீர்வு யோசனைகள் அமையுமாம். இந்த யோசனைகள் அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு வெளியிடப்பட்டு பின்னர் நடைமுறைக்கு வருமாம்,

இந்த யோசனைகளை அமுல்படுத்தும் வகையில் இது அறிவிக்கப்பட்டு ஒருவாரத்தில் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்றையும் ஜனதிபதி நியமிக்க உள்ளாராம். அதாவது இந்த யோசனைகள் பற்றி மக்களும் அரசியல் கட்சிகளும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க ஒரு கிழமை அவகாசமே வழங்கப்படுகிறது. இதிலிருந்து வழங்கப்படவுள்ள அதிகாரப் பரவலாக்கல்கள்கூட அத்தகைய பாரதூரமானவைகளாக இருக்கமுடியாதென்றே ஊகிக்க முடிகிறது.

நியமிக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக 15 பேர் இன விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்படுவர் என்றும் தெரியவருகிறது. இத்தகைய நியமனம் டொனமூர் திட்ட சட்டசபையில் இனவிகிதாசார முறையில பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டமையை ஒத்ததே. தமிழர்களின் தாயகப் பிரதேசங்களுக்கு சமீபத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் தொகையும் கணக்கில் எடுக்கப்பட்டு இன விகிதாசாரம் என்ற போர்வையில் சிங்களவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இந்த இடைக்கால நிர்வாகசபையில் தான் கொழும்பில் இயங்கும் உதிரித் தமிழ்க் குழுக்களும் தமக்கு ஏதோ ஒரு விபத்தின் காரணமாக கிடைத்த நாடாளுமன்ற அங்கத்துவ பதவியை வைத்துக்கொண்டு பங்கேற்கப்போகிருர்கள்.

ஒன்றையும் தீர்த்துவைக்க முடியாத அரசு முன்வைக்கவிருக்கும் இந்த அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை எதுவுமே நடத்தமாட்டாது என்று அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை என்பது புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்றவைகளின் அடிப்படையிலேயே நடத்தப்படுவது உலக வழக்கு. உத்தேச தீர்வு எடுத்த எடுப்பிலேயே ''ஒற்றை ஆட்சியின் கீழ்'', ''அதிகாரப் பரவலாக்கல'' போன்றவற்றை கொண்டிருப்பதால் அடிப்படை விடயங்களிலேயே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசங்கள் இருக்கும்போது அமைச்சர் பீரிஸ் அழைத்தாலும் விடுதலைப்புலிகள் அரசுடன் பேசப்போவதில்லை. அமைச்சர் பீரிஸினதும் சந்திரிகாவினதும் உத்தேசத் தீர்வு திட்டம் போக இடமில்லாமல் தவிக்கும் கொழும்பில் இயங்கும் உதிரித் தமிழ்க் குழுக்களோடு பேசுவதற்கே தகுதியானது.

ஆனல் அரசியல் ஆய்வாளர்கள் விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்க்கப்படாத எந்தத் தீர்வுத் திட்டமும் பயனற்றவையாக அமுல்செய்ய முடியாதவையாக போய்விடும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்ல தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத அவர்களின் அபிலாசைகளைத் தீர்த்துவைக்காத எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் தமிழர்களும் அவர்களது உண்மைப் பிரதிநிதிகளும் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள் என்பதை அமைச்சர் பீரிஸ் இன்னமும் தெரிந்துகொள்ளாத மனிதராய் இருந்தால் இனியாவது தெரிந்து கொள்ளட்டும்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிவீதி இலங்கை வங்கி கிளைக்கு முன்பாக நேற்றுகாலை 9 30 மணிக்கு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்கைசேர்ந்த ஆறுப்பிள்ளை விநாயகமூர்த்தி என்பவரே காயமடைந்தவராவார். 170-சி

## யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க அதிகாரிகள்
# வட - கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் உத்தியோகஸ்தர்கள் சிலர் அண்மையில் திருகோணமலை சென்று வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

தற்போது வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் எதிர்கொள்ளும் உணவு மற்றும் நிதிசம்பந்தமான விடயங்கள் இப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் சங்கங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கு அரசாங்கம் அனுமதிவழங்கவேண்டும். அத்துடன் சங்கங்கள் கொள்முதல் செய்யும் உணவுப் பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்குசங்கங்களுக்கென தனியொரு கப்பலை வாடகைக்கு அமர்த்தித்தர வேண்டும். இப்படியான பல பிரச்னைகளை சங்கஅதிகாரிகள் ஆளுநருக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்திஆணையாளர் திரு. சுந்தரம டிவகலாலாவும் கலந்துகொண்டார். 170 சி

## அமெரிக்கப் போதகரை
## இருவாரம் தடுத்துவைக்க
# நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

மெதடிஸ்தசபையின் போதகரான அமெரிக்காவைச் சேர்ந்த கெனத் முல்டரை மேலும் இரண்டுவாரகாலம் பொலிசார் தடுத்து வைப்பதற்கு கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

கடந்த சனிக்கிழமை கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் எவ்வித விசாரணையுமின்றி மூன்று தினங்களாக வைக்கப்பட்டிருந்த பின்னர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

அப்போது இவரை விசாரிக்க வேண்டியிருப்பதாக பொலிசார் கூறியதையடுத்து நீதிபதி மேலும் இருவாரகாலத்திற்கு அவரை தடுத்து வைத்திருப்பதற்கு பொலிசாருக்கு அனுமதி வழங்கினர்

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட போதகர் கெனத் முல்டரை விசேட பொலிஸ் குழுவொன்று விசாரிக்கவுள்ளது. கி-சி

## இராசி பலன்

26–07–1995

புதனகிழமை

[தமிழுக்கு ஆடி—10]

சதுர்த்தசி மு: இ.7 51வரை புனர்பூசம் முழுவதும் இராகு காலம் நண்பகல் 12-02 முதல் 1-32 வரை, சுபவேளை மாலை 4-32 முதல் 6-02 வரை. கரிநாள், சித்தயோகம்.

**மேடம்:** மேலான நிலை, தொழில் லாபம், காரியசித்தி.

**இடபம்;** வாக்குக்கலகம், பணமுடை, குடும்பக் கவலை.

**மிதுனம்:** அதிகாரிகள் உதவி முயற்சி பலிதம், தெய்வப் பணி.

**கடகம்:** கருத்து முரண்பாடு, உடல்சோர்வு, அலைச்சல்

**சிங்கம்:** தாயன்பு, சுபச் செய்தி, மனமாற்றம்.

**கன்னி:** எதிர்பாராதவெற்றி தொழில் முதலீடு, கலகலப்பு.

**துலாம்:** அமைதிக் குறைவு, நண்பர் பகை. கடன் சுமை

**விருச்சிகம்:** பழிச் சொல், தொழில் போட்டி, வெறுப்பு.

**தனுசு:** உறவினர் சகாயம், அதிகாரப்போட்டி, தரிசனம்.

**மகரம்;** சுபகாரியச் செலவு பொதுப்பணி, முதியவர் ஆசி.

**கும்பம்:** எதிர்பாராத குற்ற உணர்வு, மனவேதனை, வைத்தியச்செலவு.

**மீனம்:** குடும்பப்பிரிவு, கோபவார்த்தை, வெளியார் தலையீடு.

— ஜோஸ்யர்

## கூட்டுறவு பரிசோதகர்களின்
# சம்பளம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச்சங்க பரிசோதகர்களின் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அண்மைய அமைச்சரவைதீர்மானமொன்றுக்கு அமைய மாற்றப்பட்ட இச்சம்பள அதிகரிப்பு 01.08.94 முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை கூட்டுறவு மாகாண சபைகள் அமைச்சினுல் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. கி-சி

# முஸ்லிம் காங்கிரஸ்
# கூட்டணியுடன் பேசும்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கென தனியான மாகாண அலகு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு நடத்தவுள்ளதாக 'தினமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பேச்சு அடுத்த சிலதினங்களில் கொழும்பில் இடம் பெறுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் குழு அதன் தலைவரும் அமைச்சருமான அஷ்ரப்பின் தலைமையில் இச் சந்திப்பில் கலந்து கொள்ளும். கி-சி

## பலதும் பத்தும்

### கடுகு சிறிதுதான்...!

''கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது'' என்பது பழமொழி. இன்று... கம்பியூட்டர்களின் அளவு சிறிதாகி வந்துவிட்டாலும் அதன் ஆற்றலும் ஞாபகசக்தியும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

1944ல்... ஒரு அறை முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்தது ஒரு கம்பியூட்டர். பதினெண்ணாயிரம் வால்வுகள் அதில் பொருத்தப்பட்டிருந்தன. 1965ல்... 'ட்ரான்சிஸ்டர்' வந்தபிறகு அதன் பின்...... சிறியளவு I. C. (Integrated Circuit) வந்த பின்... அதன்பின் ஒரு சிலிக்கன் சதுரத்திற்குள் பல்லாயிரக்கணக்கான ட்ரான்சிஸ்டர்களை அடக்கக்கூடிய L. S. I. (Large Scale Integration) வந்த பிறகு கையடக்கமான கம்பியூட்டர்கள் சந்தைக்கு வந்துவிட்டன.

மலிவு விலையில் வந்தபடியால் அதன் பாவனை பல துறைகளுக்கும் அதிகரித்து விட்டதாம்!

— மயூரன்

## கூட்டுறவுச் சங்கங்களின்
# ஐந்து கோடி ரூபா
# கொழும்பில் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்கொழும்புக்கு கொண்டு சென்ற சுமார் ஐந்து கோடி ரூபா கொழும்பில் கடந்த மூன்று மாத காலமாக முடங்கி கிடக்கின்றது.

இதனுல் குடாநாட்டு மக்கள் உணவு நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதுடன் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் தமது நிதியில் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன

குடாநாட்டில் உள்ள நாலு கூட்டுறவுக் கோட்டங்களை சேர்ந்த 23 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 1000 மெ. தொன் உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கு 38 லட்சம் ரூபாவை கப்பல் கட்டணமாக செலுத்தி உணவு பொருட்களை ஏற்றுவதற்கு கொழும்பில் உள்ள அரச உயரதிகாரிகள் கப்பலில் இடம் ஒதுக்கிகொடுத்தும் 3 மாதமாகியும் இன்னும் இப்பொருட்கள் இங்கு வந்து சேரவில்லை.

இத்தகைய கெடுபிடிகளினுல் சங்கங்கள் மக்கள் வங்கியில் இருந்து கடனைப் பெற்ற சுமார் 5 கோடி ரூபாவுக்கும் 15 லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக வட்டி செலுத்தப்படுவதோடு மேலும், பல பாரிய செலவினங்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. 170-சி

# "தமிழ் மக்களையே நாம் வல்லரசுகளாக கருதுகிறோம்"

## செழியன் உரை

(சாவகச்சேரி)

உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்களுள் தரைப்படை கடல்படை, விமான எதிர்ப்புப்படை போன்ற முப்படைகளையும் கொண்ட விடுதலைப் போராட்ட அமைப்பு தமிழீழத்தில் தான் உள்ளது. தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டு நெறிப்படுத்தப்படும் இந்தப்படையணிகளின் தாக்குதலுக்கு இன்று ஈடுகொடுக்க முடியாத சந்திரிகா அரசு வல்லரசுகளின் ஆலோசனைகளைப் பெற அமெரிக்கா சென்றுள்ளது. சந்திரிகா அரசுக்கு அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா என்பன உதவிவருகின்றன.

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. செழியன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

நாம் எந்தவொரு வல்லரசுகளையும் நம்பிப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. நாம் எமது மக்களையே வல்லரசுகளாகக் கருதுகின்றோம். எந்தவொரு வல்லரசுப்படை இங்கு வந்தாலும் நாம் அதற்கு அஞ்சப்போவதில்லை. வியட்நாம் மக்களின் வீரம்செறிந்த போராட்டம் அமெரிக்காவுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பித்தது. செச்னியாவில் ரஷ்யப்படைகளுக்கு நல்ல அடி கிடைத்தது. இந்தியப் படைக்கும் நல்லதொரு பாடம் இங்கு கிடைத்தது.

அரசு வடபகுதி மீது மற்றும் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது. முன்னேறிப் பாய்தலில் ஈடுபட்ட பதினையாயிரம் துருப்புக்களும் தற்போதும் வடபகுதியில்தான் உள்ளன. யாழ் குடாவை நாற்பத்தி ஐயாயிரம் துருப்புக்கள் சுற்றி வளைத்து நிற்கின்றன. தமிழீழப் பிரதேசத்தில் இன அழிப்புக்காக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவம் நிலைகொண்டுள்ளது. நாம் தனி ஒரு மாவட்டத்திற்காகப் போராடவில்லை தமிழீழப் பிரதேசத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நிமிடத்துக்கு ஆறு எறிகணைகளை வீசி மூன்று நாட்களில் முன்னேறிய படைகளை பல மாவட்டங்களிலிருந்தும் போராளிகளை கொண்டுவந்தே விரட்டியடித்தோம் எதிரியானவன் மற்றொரு தாக்குதலுக்கு தயாராகி வருகின்ற இவ்வேளையில் அவன் நாளை எமது பகுதிக்கோ அல்லது எங்கள் வீட்டுக்கோ வரலாம். எம்மீதும் தாக்குதலை மேற்கொள்லாம். எம்மை நாம் பாதுகாக்க இங்குள்ள ஒவ்வொருவரும் ஆயுதம் ஏந்தவேண்டும் என்றார். 155 சி

# இலவசஉணவு வழங்கலுக்கு மாதாந்தம் 600 கோடி ரூபா

(கொழும்பு

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வறுமை ஒழிப்புத் திட்டமான சுபீட்சத்தின் கீழ் உணவுப்பொருள் விநியோகத்துக் கென மட்டும் மாதாந்தம் 600 கோடி ரூபா ஒதுக்கப்படுகின்றது.

இதைவிட சுபீட்ச உதவி பெறுவோருக்கு 200 ரூபா ரொக்கப்பணக் கொடுப்பனவுக்கென தனியாகப் பணம் ஒதுக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உணவு உதவியைப் பெறுவோருக்கு அரிசி விநியோகத்திற்கென தனியான உணவு முத்திரையொன்றும் வழங்கப்படவிருக்கின்றறு. கி.சி

# நவாலி தேவாலயப் பகுதி துப்பரவாக்கப்படுகிறது

(யாழ்ப்பபணம்)

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயப்பகுதி துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் சுகாதார நடவடிக்கைகளை மானிப்பாய் சுகாதார பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர் இங்கு தொற்று நோய்தடுப்புமருந்துகளையும் விசிறி வருகின்றனர்

இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாலும் தொற்று நோய்கள் பரவாவண்ணம் பாதுகாக்கப்படும் பட்சத்திலும் மருந்துகள் விசிறும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மானிப்பாய் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார் 170-ஓ

# தமிழகத்தில் புலிகள் நடமாட்டம் பற்றி மத்திய அரசுக்கு அறிக்கை

(சென்னை)

அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்குறித்து விசாரித்து மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மத்திய அதிகாரி ஒருவர் சென்னைக்கு வருகைதரவுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சுச் செயலாளர் பத்மநாப ஐயா என்பவரே இதுகுறித்த விசாரணை நடாத்த தமிழகம் வரவுள்ளார்.

இவர் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று இதன் உண்மை நிலைபற்றி அறிந்து கொள்ளுவார்.

இவ்விவகாரம் பற்றி ஆராய்வதற்காக பத்மநாப ஐயாவை தமிழகம் அனுப்ப மத்திய அரசு ஏற்கனவே திட்டமிட்டிருந்தபோதிலும் காஷ்மீரில் இடம்பெற்ற 'குண்டு வெடிப்பு பற்றி ஆராய்வதற்காக அவர் அங்கு சென்றிருந்ததால் தமிழக விஜயம் தாமதமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி கி

# வாடிக்கையாளரிடம் வங்கி விபரம் கோருகிறது

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் இருக்கும் மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் தங்களது தற்போதைய முகவரியை அறிவிக்குமாறு மக்கள் வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார்.

யாழ் கன்னாதிட்டி, சங்கானை மக்கள் வங்கிக் கிளைகளில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தற்சமயம் இடம் பெயர்ந்த தங்கியிருக்கும் முகவரியைத் தெரியப்படுத்தும்படியும் அல்லது தமது கணக்குகளுக்குரிய மாதாந்தக் கூற்றுகளை அலுவலக நேரத்தில் நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வங்கி முகாமையாளர்வேண்டுகோள் விடுத்துள்ளார். 162 ஓ

# ★ ஜம்மு காஷ்மீரில் சிறையிலுள்ள தீவிரவாதிகளை மத்திய அரசு விடுதலை செய்யாது

(புதுடில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச்சென்று பணயமாக வைத்துள்ள ஐந்துவெளிநாட்டவரையும் விடுவிப்பதற்காக, இந்தியசிறைச்சாலைகளிலுள்ள இருபது காஷ்மீர் போராளிகளை கைதிப்பரிமாற்றம் செய்ய இந்தியஅரசு தயாராக இல்லை என மத்திய உள்துறை அமைச்சுச்செயலர் திரு. பத்மநாபஐயா தெரிவித்துள்ளார்.

சிறையிலுள்ள 20 காஷ்மீர் தீவிரவாதிகளையும விடுவிப்பதன் மூலம் கடத்தப்பட்ட வெளிநாட்டவர்களை விடுவிக்க முடியுமென்ற தீவிரவாதிகளின் கோரிக்கையை அவர் நிராகரித்தார். இவ்வாறான ஒரு பரிமாற்றத்திற்கு இடமே இல்லையெனவும் பத்மநாபஐயா கூறியிருக்கின்றார்.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகருக்கு 90கிலோமீற்றர் தொலைவில் வைத்து இந்த ஐந்து வெளிநாட்டு உல்லாசப்பயணிகளும் காஷ்மீர் தீவிரவாதிகளினால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். இவர்களில் இருவர் பிரிட்டனையும் மற்றவர்கள் அமெரிக்கா, ஜேர்மனி நோர்வேயைச் சேர்ந்தவர்கள். கி-சி

# லண்டன் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் சிலை

(சென்னை)

லண்டனிலுள்ள பல்கலைக்கழகமொன்றின் முன்றலில் திருவள்ளுவரின் சிலையொன்று வைக்கப்படவுள்ளது.

இதன் பொருட்டு ஐந்தடி மூன்றங்குலஉயரமும், அரைத்தொன் நிறையுமுடைய வெண்கலத்திலான திருவள்ளுவரின் சிலை ஒன்று தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சிலை அடுத்த சில தினங்களில் லண்டனுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இந்த சிலையை இரண்டே முக்கால் இலட்சம் ரூபா செலவில் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இதனை லண்டனுக்கு எடுத்துச் செல்வதற்கான விமானக்கட்டணமான ஒரு இலட்சம் ரூபாவையும் தமிழக அரசேசெலுத்தும்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய பிரிவின் முன்றலில் இச்சிலை நிறுவப்படவுள்ளது. கி.சி

# கோழிச்சண்டை கத்திவெட்டில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

ஒரே வீட்டில் இருந்த இரு குடும்பங்களுக்கிடையில் இடம்பெற்ற கோழிக்கான தகராறு இறுதியில் கத்திவெட்டில் முடிந்தது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் வடலியடைப்பில் இருந்து இடம்பெயர்ந்த இளம்பெண்ணே தலையில் கத்திவெட்டுக்கிலக்காகிப் படுகாயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90 ஓ

# நெல்குற்றும்இயந்திரத்துள் சிக்கி காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

நெல் குற்றும் ஆலைஇயந்திரத்தை இயக்குவதற்கு அதன் பட்டியை (பெல்ட்) இயந்திரச் சக்கரத்துடன் பொருத்திய போது அதனுள் கால் அகப்பட்டதால் இடதுகால் முழங்காலுக்குக் கீழ். துண்டிக்கப்பட்டார்.

சாவகச்சேரி நுணாவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நுணாவிலைச்சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா (வயது 67) என்பவரே கால்துண்டிக்கப்பட்டவராவர்.

கால்துண்டிக்கப்பட்ட இவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90-சி

# ஆடி அமாவாசை வில்லூன்றியில் தீர்த்தமாட வசதி

(யாழ்ப்பாணம்)

பிதிர்க் கடமைக்குரிய சிறப்பு நாளான ஆடி அமாவாசை நாளை 27ம் திகதி வியாழக்கிழமை ஆகும்.

ஆடி அமாவாசைக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் கடந்த வருடங்கள் போல இம்முறையும் வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலனசபை அறிவித்துள்ளது. துப்பரவு வேலைகளுக்காக புனித தீர்த்தக்கேணி இன்று செவ்வாய்க்கிழமை இறைத்துத் துப்பரவு செய்யப்படவிருக்கிறது அதற்காக இன்றும் நாளையும் புனித தீர்த்தக்கேணி பாவனை நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் அந்தியேட்டி மடங்களில் அந்தியேட்டிக் கிரியைகளை வழமை போல் செய்து கொள்ளலாம் என பரிபாலனசபை அறிவித்துள்ளது.

# திருவிழா

(அரியாலை)

யாழ், பாண்டியன் தாழ்வு புனித- ஆனாள் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று புதன் கிழமை திருவிழா நிறைவு பெறுகின்றது- 59

# மாணவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

செங்குந்தா இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, புங்குடுதீவு மகளிர் மகாவித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கந்தர்மட சைவப் பிரகாச வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி' உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் முதலுதவிப் பயிற்சி பெறும் மாணவர்களும் நல்லூர் உற்சவ காலத்தில் சேவையாற்றவுள்ள சகல மக்கள் நலன்புரிச்சங்க தொண்டர்களையும் இன்று புதன் கிழமை 4 மணிக்கு நல்லூர் மங்கையகரசி வித்தியாலயத்தில் சென்றுசேருமாறு கேட்கப்பட்டுள்ளனர். ஓ

# மேலும் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் கடந்த 9ம் திகதி இடம்பெற்ற புக்காரா விமானத்தாக்குதலின் போது படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் ஒருவர் நேற்று மரணமானார்.

நவாலியைச் சேர்ந்தவிமலா செல்வநாயகி தம்பிநாயகம் (37வயது) எனபவரே மரணமானவராவார். 90-ஓ

# ஒரு வருடத்தின்பின் சிக்கிய சைக்கிள் திருடன்

(நெல்லியடி)

அல்வாய் மாலி சந்திப்பகுதியிலிருந்து சைக்கிளைத் திருடிய இளைஞரை சுமார் ஒரு வருட காலத்தின் பின்னர் பளைப்பகுதியில் வைத்து கைது செய்த பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினர் அவரிடமிருந்து சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சைக்கிள் உரிமையாளர் காவல் பணிமனையில் மூறையீடு செய்ததையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை காவல்துறையினர் கடந்த வாரம் பளையில் வைத்து திருடனைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியவேளை கரவெட்டிப்பகுதியில் ஒரு வீட்டிலிருந்து சுமார் ஆறுயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் மீட்கப்பட்டது. 160 சி

சேதங்கள் குறித்து

# வீடுகளுக்குச் சென்று காவல்துறையினர் பதிவு

(வட்டுக்கோட்டை)

சங்கானை காவல்துறையினர் காவல்துறை பணிமனையில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்கள், களவுகள், மரணங்கள், பாதிப்புக்கள் முதலானவை பற்றி புகார் செய்தவர்களது வீடுகளுக்கு நேரடியாகச் சென்று விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இவர்கள் வீடுவீடாகச் சென்று பொதுமக்கள் புகார் செய்த குறிப்புக்கள் சரியாகவுள்ளனவா என்பதை நேரடியாகப் பார்வையிட்டு பதிவு செய்வதோடு ஆறுதல் கூறியும் வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட வீடுகளின் படங்கள் வரைந்து செல்வதோடு பயன்தரும் மரங்கள் குற்றிய முழு விபரங்களையும் பறித்துச் செல்கின்றனர்.

இதுவரை சுமார் இருநூறுக்கு மேற்பட்ட புகார்கள் பணிமனையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் எண்றூறுக்கு மேற்பட்ட புகார்கள் பதியவேண்டியிருப்பதாகவும் இப் பதிவுவேலைகள் தொடர்ந்தும் சங்கானை காவல்துறை பணிமனையில் பதியப்பட்டு வருவதாகவும்

(6ம் பக்கம் பார்க்க)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாடு வலிகாமக்கோட்ட ஆசிரியைகளுக்கான ஒன்றுகூடல் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு திருநெல்வேலிஆடியபாதம் வீதியிலுள்ள சின்ன முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# செங்களமாடிட வந்து வந்தே குவிவாய்

கைமுனுவின் தாய்ராணி
கருவடைந்தா ளடைந்தவுடன்
கமலக் கண்ணில்
பொய் வருத்தங் காட்டுகிருஅ
பொன்முடியா னடி தடவிப்
பூவே யென்முன்
நெய்யடிசில் தனைவேண்டேன்
நெருஞ்சிமலர் நீளமளி
நெரிக்குதென்முள்
கைதடவிக் காதலிக்கும்
காவலனே உன்னுசை
கனிவா யென்முன்.

தமிழ் மகனின் தலைபறித்துத்
தாவென்முள் தந்தவுடன்
தாளிற்போட்டு
ஒழுகுகின்ற குருதியிடை
ஓயாத உவகையுடன்
நடந்து சென்று
''களக ளெனத்'' தலை சொரியுங்
காயா நீர் களிப்புடனே
பருகிச் சோர்வைக்
களைத லெனக் காசையிது
காட்டென்முள் யாரங்கே
என்முன் மன்னன்.
ஆஹாவென் றெழுந்தோனேர்
ஆரியத்தி னேவலூறும்
சுமணன் என்பான்
ஆகாத மோசத்தால்
இளந்தமிழன் தலைகிள்ளி
அருகே வைத்தான்
நாவாரக் குடித்தவளும்
நாளேகக் கைமுனுவைப்
பெற்றுளென்று
சீராகப் புத்தமஹா
வம்சத்தி னுட்புறத்தே
செதுக்கிவைத்தார்.

இந்தக் கதை பழம்
வம்சக் கதையிது
இன்னமும் முற்றவில்லை-எங்கள்
சொந்தத் தமிழ்க்குலச்
சோரி யருந்திடல்
சற்றிலும் நிற்கவில்லை - இனி
எந்தக் கரை வரை
ஏக்கமுடன் தனி
ஏகிடக் காலெடுப்பாய் - அட
சிந்தை கொள்வாயினி
செங்கள மாடிட
வந்து வந் தேகுவிவாய்!

— நிம்மதி

யாழ். மாவட்ட

வெதுப்பக உரிமையாளர் சங்கம்

# எழுதுவினைஞர் தேவை

(பெண்)

கல்வித்தகைமை: க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி, அத்துடன் க பொ.த. சாதாரண பரீட்சையில் கணிதத்திற்கு விசேட சித்தியும் இருத்தல்வேண்டும்.

வயது: 40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

★ முன்னர் எழுதுவினைஞராக கடமையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ சிபார்சு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர் விபரங்களை குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பங்களை 04-08-95 பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(ஏ-5143)

# முக்கிய அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் கீழ்க் குறிப்பிடப்படும் திகதிகளை அவதானித்து, செய்முறை வகுப்புக்களுக்கும், விரிவுரைகளுக்கும், போதனு வைத்தியசாலையில் நடைபெறும் பயிற்சிகளுக்கும், பரீட்சைகளுக்கும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

1. மருத்துவ பீடம்

போதனு வைத்தியசாலை பயிற்சிகள் 31-7-1995ம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

17-7-1995இல் நடைபெறவிருந்த 2ம் வருட எம் பி பி எஸ் பரீட்சை 21-8-1995இல் நடைபெறும்.

2. விஞ்ஞான பீடம்

விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும் 31-7-1995இல் மீண்டும் ஆரம்பமாகும். மாணவர்கள் அனைவரும் தத்தம் துறைத் தலைவர்களை 31-7-1995ம் திகதி காலை 9-00 மணிக்கு சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

3. விவசாய பீடம்

விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும், 31-7-1995இல் ஆரம்பமாகும்.

4. சித்த மருத்துவத்துறை

விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும் 31-7-1995இல் ஆரம்பமாகும்.

5. கலைப் பீடம்

பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (முழு நேரம் நெறிக்கான விரிவுரைகள் 31-7-1995இல் ஆரம்பமாகும்.

பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (பகுதி நேரம்), தொழிலாளர் கற்கைநெறி, புறநிலைப் படிப்புகள் அலகு ஆகிய நெறிகளுக்கான விரிவுரைகள் 5-8-1995இல் ஆரம்பமாகும்.

கலைப்பீட ஏனைய கல்வித் துறைகளுக்கான விரிவுரைகள் 7-8-1995இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
1995-07-25.

(ஏ 5144)

# மடுமாதா திருவிழா

(அரியாலை)

மன்னார் மாவட்டத்திலுள்ள யாத்திரை தலமாக விளங்கும் மருதமடு திருப்பதியில் புனித மரியன்னையின் விண்ணேற்பு விழா அடுத்த மாதம் 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நவநாள் ஆராதனைகள் நடைபெறவுள்ளது.

ஆவணி மாதம் 15ந் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை தலைமையில் திருவிழா நடைபெறும். இம்முறை கொழும்புபேராயர் அதிவண. நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ ஆண்டகை யாழ். ஆயர் கலாநிதிதோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. 59-சி

## மண்டைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். பத்திமா [30 வயது] சர்மிலா [15 வயது], ஏ. நிசாந்தினி [11 வயது], ஏ. பிறேமா [30 வயது]. வி. அன்ரனிஸ் [11 வயது], எஸ். விகோரி [65 வயது], கி. அஜித்தா [4 வயது], வி சந்திரா [33 வயது], ஏ. தினேசம்மா [35 வயது] இவர்கள் அனைவரும் குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்தவர்கள். -ரி

## ராணுவ ஊழல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

வடக்கு கிழக்குப் பகுதியில் இடம்பெறும் யுத்தத்தை சாட்டாக வைத்து படைகளிலுள்ள படை அதிகாரிகள் பலர் பெருமளவு சொத்துக்களை சேகரித்துள்ளது தெரிந்ததே.

ஆயுதம் மற்றும் விமானம், கடற்படைக் கப்பல்களென இடம்பெறும் ஆயுதத் தளபாடக் கொள்வனவில் பெருமளவு ஊழல்கள். மோசடிகள் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [ம-ரி]

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

# முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினால் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்பட்ட உடற் கல்விப்பணிப்பாளர், தாதி தரம் 2 (பெண்) பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் 2 (ஆண்), களஞ்சியப் பொறுப்பாளர் தரம் III (ஆண்) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1995ம் ஆண்டு யூலை மாதம் 31ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
1995-07-24.

(ஏ-5140)

தமிழினத்தை அழிக்கும்

# அரசு மீது அழுத்தம் கொடுக்குமாறு பிரிட்டிஷ் பிரதமரிடம் கோரிக்கை

(லண்டன்)

இராணுவ நடவடிக்கையை நடாத்தி தமிழின அழிப்பை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அரசு மீது அழுத்தங்களை கொடுக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரை அங்குள்ள தமிழ் வழக்கறிஞர்கள் சங்கம் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்கள் சந்தித்துள்ள பேரழிவுகளை வழக்கறிஞர்கள் முழுமையாக பிரிட்டிஷ் பிரதமருக்கு சுட்டிக் கட்டியுள்ளனர்.

சிறிலங்கா அரசு பொருளாதார தடை போட்டும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டும் தமிழர்களை அழிக்கவே முனைகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவுப் பொருட்களையும் மருந்து பொருட்களையும் உடன் அனுப்ப சிறிலங்கா அரசை வலியுறுத்த வேண்டும் எனவும் தமிழ் வழக்கறிஞர் சங்கம் பிரிட்டிஷ் பிரதமரை கேட்டுள்ளது. -ரி

பொலிஸாரால் கைதான

# போதகர் கென்னத்துக்கு புலிகளுடன் தொடர்பில்லை

(லண்டன்)

அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க மத போதகர் கெனத் முஸ்டர், விடுதலை புலிகளுடன் தொடர்புடைய ஆவணங்களை வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டபோதும் அது உண்மையல்ல என தேசிய கிறிஸ்தவ கவுன்ஸின் தலைவர் கெனத்பெர்ஞண்டோ தெரிவித்துள்ளார்.

இவர் கைது தொடர்பாக பி பி, ஸி தெரிவிக்கையில்; அவர் காவலில் வைக்கப்பட்ட காரணமாக இருந்தது ஒரு சுவரொட்டியே அதில்வெள்ளை அல்லி மலரொன்றிலிருந்து இரத்தம் சிந்துவதாக சித்தரிக்கப்பட்டிருந்தது;

அதன்கீழ் திரு. முஸ்டர் ''ஒப்பரேசன் போவோட்'' என்ற இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்களை புலிகள் அல்ல பொது மக்களே என்பதால் அது விலக்கிகொள்ளப்பட்வேண்டும் என்று எழுதியிருந்தார். கே-ரி

# அரசியல் சீர்திருத்தமும் இனப் பிரச்னை தீர்வும் புறம்பாயிருக்கவேண்டும்

[கொழும்பு]

வடக்கு கிழக்கு தொடர்பான அரசியல் தீர்வுத்திட்டம் உத்தேச அரசியல் சீர்திருத்தத்திற்கு புறம்பானதாக கையாளப்படவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (லலித் பிரிவு) தலைவர் திருமதி சிறிமாணி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறமை ஒழித்தல், வடக்கு கிழக்கிற்கு அதிகாரப் பரவலாக்க இரண்டும் வெவ்வேறான விடயங்களாகும். இந்த இரண்டு விவகாரங்களும் வெவ்வேறாகவே கணிக்கப்பட்டு கையாளப்படவேண்டும் எவ்வகையிலும் உத்தேச அரசியல் அமைப்பு சட்ட சீர்திருத்தங்களுடன் இரண்டையும் தொடர்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

இரண்டு விவகாரங்கள் தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் மக்களின் அங்கீகாரத்திற்கு விடப்படவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமை ஒழிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் இதற்கு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்ட கால எல்லையை தர தவறிவிட்டார் என்றும் தெரிவித்தார். [கே-ரி]

# அனுமதிப் பத்திரமின்றி விறகு ஏற்றியவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்ரதிமின்றி உழவு இயந்திரத்தில் விறகு ஏற்றிச்சென்ற அச்சுவேலியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு விறகை பறிமுதல் செய்யும்படியும் தண்டப்பணமாக 500/. அறவிடும்படியும் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் எதிராளியை குற்றவாளியாக இனம்காணப்பட்டே நீதியாளர் செல்வி எஸ். சாருலதாவினால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. ரசி

# உறங்காத கண்மணிகள் வீடியோ பட வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சி. சேரனின் 'உறங்காத கண்மணிகள்' வீடியோப்பட வெளியீட்டு விழா யாழ். சிறீதர் திரையரங்கில் இம்மாதம் 28ம்திகதி மாலை 3-00மணிக்கு நடைபெறவுள்ளது.

நிதர்சனமும் மட்டு: அம்பாறை சிறப்பு படையணியும் இணைந்து இப்படத்தைதயாரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. -ரி

# இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி அலுவலகர், அதிபர்கள், ஆசிரியர்கள்; ஊழியர்களுக்கான நிதியம் சம்பந்தமான கூட்டம் இன்று மு. ப. 10-00 மணிக்கு செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையில் நடைபெறும் என கோட்டப்பிரதிக் கல்விப் பாளர் அறிவித்துள்ளார். -ரி

நல்லூர் உற்சவம்:

# பாதுகாப்பு அமைச்சுக்கு அரச அதிபர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாவது தொடர்பாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

பிரபல்யம் வாய்ந்த இந்து ஆலயங்களில் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது தொடர்ந்து இருபத்தேழு தினங்கள் நடைபெறும் இவ் ஆலய உற்சவ காலங்களில் பெருந்தொகையான பக்தர்கள் தினமும் இங்கு கூடுவதால் இவ் ஆலயப்பகுதி பாதுகாக்கப் பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 162 ,சி

ஆனையிறவு-இயக்கச்சி

# ராணுவ முகாம்களிலிருந்து தொடர் ஷெல் தாக்குதல்

(தாளையடி)

ஆனையிறவு இயக்கச்சி இராணுவ முகாம்களிலிருந்து இரவு, பகல் வேளைகளில் குடிமனைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

ஆனையிறவு முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் உடுத்துறை வத்திராயன் கடற் பகுதியில் விழுந்து வெடித்தன. நேற்று அதிகாலைவேளை கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் தெய்வதீனமாக உயிர் தப்பி வந்தனர். 163- ரி

ஐ. நா. மனித

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

நவாலி தேவாலயக் குண்டு வீச்சு மரணங்கள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. ரி

யாழ்.

# பல்கலைக்கழக விரிவுரைகள் திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சகலபீட விரிவுரைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது சகலபீட மாணவர்களும் தமது விரிவுரைகளுக்குத் தவறாது சமூகம் கொடுக்குமாறு பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. பரமேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட சகல மாணவர்களுக்குமான செய்முறைப் பயிற்சி (கிளினிக்கல் அப்போயின்மென்ஸ்) இம்மாதம் 31ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். யூலை மாதம் 17ந் திகதி திங்கட்கிழமை தொடங்குவதற்கிருந்த இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சை ஆகஸ்ட் மாதம் 21ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

விஞ்ஞானம், விவசாயம் சித்த மருத்துவக் கற்கைநெறிகளுக்கான விரிவுரைகளும் பட்டப் பின்படிப்பு கல்வி டிப்புளோமா முழுநேர விரிவுரைகளும் இம்மாதம் 31ம் திகதி திங்கட்கிழமையும் பட்டப்பின் படிப்பு பகுதிநேர விரிவுரைகள் தொழிலாளர் கல்வி, மற்றும் புறநிலைக் கல்வி ஆகியன ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த ஏனைய கல்வித்துறை விரிவுரைகள் யாவும் ஆகஸ்ட் மாதம் 7ம் திகதிதிங்கட்கிழமை ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் மேற்கூறப்பட்ட திகதிகளில் தமது விரிவுரைகளுக்குத் தவறாது சமூகம் கொடுக்குமாறு வேண்டப்படுகிறார்கள். [162-ரி]

இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புதிய போர் முறைத் திட்டங்கள், இராணுவ தந்திரோபாயங்கள் உட்படப் பல விசேட பயிற்சிகள், இப்பயிற்சியின்போது வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வி ரி

புத்தளத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட ஆறுவது இராணுவசிப்பாயின் விபரம்உடன் கிடைக்கவில்லை

வில்பத்து வனத்தை அண்டியதாக இக் காவல் நிலையம் அமைந்திருப்பதனால் தாக்குதலை நடாத்தியோர் அவ்வனத்தினூடாக சென்றிருக்கலாமென இராணுவம் தெரிவிக்கின்றது.

தாக்குதலுக்குள்ளான காவலரண் பகுதிக்கு மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் வில்பத்து காட்டுப்பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன. கே- கி- ரி

சேதங்கள் குறித்து

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் மேற்குப் பிரிவில் அராலி குலனைப் பகுதியிலேயே அதிகமான சேதங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. 139-சி

# பிரதேச செயலர் சேதங்களைப் பார்வையிட்டார்

(வட்டுக்கோட்டை)

வலிமேற்கு பிரதேச செயலர் திரு. கா- சந்திரராஜா தமது பிரதேசத்தில் 'அதிக பாதிப்படைந்த கிராமங்களுக்குச் சென்று சேதங்களை அவதானித்து வருவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும் கூறி வருகின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி குலனை முதலான இடங்களுக்குச்சென்று அங்கு பாதிப்படைந்தோர் பாதிக்கப்பட்ட விடயங்கள் பலியானோரின் குடும்பங்களை பார்வையிட்டு பதிவுகள் செய்வதோடு மதிப்பீடுகளையும் கணித்து அவர்களுக்கு ஆறுதலும் கூறியுள்ளார்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டோர்விபரங்களைபதிவு செய்துதருமாறு கிராமசேவை அலுவலர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார். 139-சி

பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு அளவெட்டி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஷெல்கள் குடியிருப்பு பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகவும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (170-ரி)

வெற்றிலைக்கேணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில்ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையால் பகல் வேளையில் எவரும் மீன் பிடிக்கச் செல்லவில்லை. 163- ரி

# செப்ரிசிமியா குழந்தை மரணம்

(நெல்லியடி)

செப்ரிசிமியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தையொன்று நேற்று முன்தினம் ந.பகல் மந்திகை மருத்துவமனையில் மரணமடைந்துள்ளது.

நெல்லியடி முருகையன் கோவிலடியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் - மதுசா (வயது 1) என்னும் பெண் குழந்தையே மரணமடைந்தது. 160

# பழையஇடத்தில் இயங்கும்

(மானிப்பாய்)

வலி மேற்கில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்ட மானிப்பாய் ப நோ.கூ. சங்கமும் அதன் கிளைகளும் கடந்த 22ந் திகதி முதல் மீண்டும் பழைய இடத்தில் இயங்குகின்றன. 71

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 55ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under License number B/168361?.